# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC.198/2024 | Date: 25.09.2025 |
| Deposition of Witness for | : | பு.சா.1 | |
| Name | : | புஷ்பா | |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி** :-

1) இவ்வழக்கு காசோலையை தவிர எதிரியிடம் இருந்து வேறு ஆவணங்கள் ஏதேனும் பெற்றுள்ளேனா என்றால் கடனுறுதி சீட்டு வாங்கியுள்ளேன். கடனுறுதி சீட்டும் எதிரி நிரப்பாமல் தான் என்னிடம் வழங்கினார் என்றால் சரிதான். எதிரிக்கு எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்று எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு பணம் கொடுத்தபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றும் எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) 21-03-2021ம் தேதியன்று எதிரிக்கு கொடுத்தாக சொல்லும் தொகை எவ்வாறு எனக்கு கிடைத்தது என்று எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். 21-03-2021ம் தேதியன்று எதிரிக்கு கொடுத்தாக சொல்லும் நிலையில் அதற்கு எத்தனை நாட்கள் முன்னதாக எதிரி என்னிடம் கடன் கேட்டார் என்றால் ஒரு வாரத்திற்கு முன்னால் கேட்டார். எதிரி கேட்ட அன்று என்னிடம் ரூ.3,00,000/-ம் தொகை இல்லை என்றால் சரியல்ல, இருந்தது. எதிரி பணம் கேட்ட அன்றே என்னிடம் ரூ.3,00,000/-ம் தொகை இருந்தும் ஏன் அன்றைய தினம் எதிரிக்கு பணம்

கொடுக்கவில்லை என்றால் நான் கடன் கொடுக்க வேண்டாம் என்று நினைத்திருந்தேன், எனது கணவர் சொல்லி தான் கடன் கொடுத்தேன்.

3) எதிரிக்கு நான் கடன் கொடுத்த ஒரு வாரத்திற்கு முன்பு என்னிடம் பணம் இருந்தது என்பதை காண்பிக்க நான் நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் வேலை செய்யும் சக்தி பைனான்ஸ் எங்குள்ளது என்றால் சங்ககிரியில் உள்ளது. எதிரி சக்தி பைனான்ஸ்-ல் கடன் வாங்கியிருந்தார் என்றும், அந்த கடனுக்கு ஆதரவாக வழக்கு காசோலையை கொடுத்திருந்தார் என்றும், கடன் தொகையை திருப்பி செலுத்திய பிறகும் பிணைய காசோலையை திருப்பிதராமல் எனது கணவர் என் மூலமாக இந்த வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

4) நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் தொகை என்னிடம் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சட்டப்படியான எந்தவொரு தொகையும் கொடுக்க வேண்டியது இல்லை என்றும், நான் எதிரிமீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-Pushpa

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.